பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

30 04 2025 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு பல்வேறு கட்சிகள் வரவேற்பு தெரிவித்துள்ளன.
2. எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படைகள் அத்துமீறி செயல்பட்டால், உரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று இந்தியா எச்சரித்துள்ளது.
3. ரஷ்யாவில் 9ஆம் தேதி நடைபெறவுள்ள வெற்றிதின அணிவகுப்பில் பங்கேற்பதற்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் மாஸ்கோ செல்லவுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
4. தேசிய கல்விக் கொள்கை இளையோரின் மேம்பாட்டை உறுதி செய்யும் என்று மத்திய கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்துள்ளார்.
5. **Bermuda** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Veer Chotrani** மற்றும் ஜோஷ்னா சின்னப்பா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<

மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு பிஜேபி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் வரவேற்றுள்ளன.

மத்திய அமைச்சரவையின் இந்த முடிவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியுள்ள சாதியினரின் மேம்பாட்டிற்கு இந்த முடிவு முக்கியமானது என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி, சாதிகளிடையே வேற்றுமையை உருவாக்கி அவர்களை வாக்கு வங்கியாக பயன்படுத்தி வந்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பதே இதற்கு சான்று என்று அவர் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த சமூகத்தின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்ட இந்த முடிவுக்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. நட்டா கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா-வும், இந்த முடிவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சமூகநீதியை உறுதி செய்வதற்கான சிறப்பான முடிவு இது என்று குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சாதிவாரி கணக்கெடுப்பை எதிர்த்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

நலிவடைந்த பிரிவினரின் முன்னேற்றத்தை உறுதி செய்யும் மகத்தான முடிவு இது என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகனும், மத்திய அமைச்சரவையின் முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், இதன்மூலம் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, விளிம்பு நிலை மக்களின் சமூக பொருளாதார சூழல் அறிந்து, அதற்கேற்ப இடஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என்று கூறியுள்ளார்.

சமூக மாற்றத்திற்கு இந்த முடிவு உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

மத்திய அரசின் இந்த முடிவு காரணமாக, சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான பிரச்சினையில், திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகளின் முகத்திரை கிழிந்துள்ளதாகவும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரும், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த கணக்கெடுப்பு நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுப்பதற்கு உதவிடும் என்று திரு. நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

தமிழகத்தில் அஇஅதிமுக, பாமக, அமமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் மத்திய அமைச்சரவையின் இந்த முடிவினை வரவேற்றுள்ளன.

>>>>>><<<<<

எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படைகள் அத்துமீறி செயல்பட்டால், உரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று இந்தியா எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக, ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர், பாகிஸ்தானின் தலைமை இயக்குநரோடு தொடர்பு கொண்டு பேசியதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இருநாடுகளின் தலைமை இயக்குநர்களுக்கான பிரத்யேக தொலைபேசி உரையாடலில் இந்தியா இக்கருத்தை பதிவு செய்துள்ளது.

>>>>>><<<<<

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ரஷ்யாவில் 9ஆம் தேதி நடைபெறவுள்ள வெற்றிதின அணிவகுப்பில் பங்கேற்பதற்காக மாஸ்கோ செல்கிறார்.

இந்த அணிவகுப்பில் பங்கேற்குமாறு ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின், பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தியாவின் சார்பில் திரு. ராஜ்நாத் சிங் இதில் பங்கேற்பார் என்று அந்நாட்டு அரசிடம் மத்திய அரசு தெரிவித்தது.

இதன் அடிப்படையில் திரு. ராஜ்நாத் சிங் இந்த அரசுமுறைப் பயணத்தை மேற்கொள்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>>><<<<<**

தேசிய கல்விக் கொள்கை இளையோரின் மேம்பாட்டை உறுதி செய்யும் என்று மத்திய கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் **Sukanta Majumdar** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான இரண்டு நாள் தேசிய பயிலரங்கை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கல்வி நிறுவனங்களை நவீனமயமாக்குவதற்கும் இந்த கொள்கை உதவிடும் என்று அவர் கூறினார்.

ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கும், புதுமை கண்டுபிடிப்புகளுக்கும், சர்வதேச ஒத்துழைப்புகளுக்கும் தேசிய கல்விக் கொள்கையில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. டாக்டர் **Sukanta Majumdar** தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பணிகளை மேற்கொள்வதில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக தலைமைச் தேர்தல் ஆணையர் திரு. **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

தேர்தல் அலுவலர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமினை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பீகார், ஹரியானா மற்றும் தில்லியைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் முகவர்கள் இதில் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் பதிவு மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பணிகள் குறித்து இந்த இரண்டு நாள் பயிற்சி முகாமில் எடுத்துரைக்கப்படவுள்ளதாகவும் திரு. **Gyanesh Kumar** கூறியுள்ளார்.

**>>>>>><<<<<**

தேசிய மனித உரிமைகள் ஆணையம், கர்நாடக அரசின் தலைமைச்செயலர் மற்றும் காவல்துறை தலைவருக்கு இரண்டு நோட்டீஸ்களை அனுப்பியுள்ளது.

சிறுமியை கடத்தி கொலை செய்த வழக்கு, காவல்துறையால் கைது செய்யப்பட்ட ஒரு நபர் என்கவுண்டரில் கொல்லப்பட்ட விவகாரத்தில் உரிய விளக்கம் கோரி இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விரிவான அறிக்கையை 4 வாரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்திரிகைகளில் வெளியான செய்திகளின் அடிப்படையில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது.

**>>>>>><<<<<**

நாடுமுழுவதும் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ரயில்வே துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் காட்பாடி ரயில் நிலையத்தில் டிஜிட்டல் லாக்கர் அறை திறக்கப்பட்டுள்ளது.

தனியார் பங்களிப்புடன் ரயில்வே துறை இந்த வசதியை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மோகன் 56 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<**

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம், அடுத்த மாதம் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு. **Mrutyunjay Mohapatra** கூறியுள்ளார்.

காணொலி வாயிலாக இதனை தெரிவித்த அவர், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், மத்தியப்பிதேசம், உத்தரபிரதேசம், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மேற்குவங்கத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் வழக்கத்தைவிட கூடுதலான நாட்களுக்கு அனல் காற்று வீசக்கூடும் என்றார்.

குஜராத், ஒடிசா, சத்திஷ்கர், மஹாராஷ்ட்ரா, தெலங்கானா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தே காணப்படும் என்றார்.

சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்றும், வெயிலின் தாக்கத்தை குறைக்க இது உதவிடும் என்றும் திரு. **Mrutyunjay Mohapatra** தெரிவித்தார்.

**>>>>>><<<<<**

**Bermuda** ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் **Veer Chotrani** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 11-3, 11-6 என்ற செட்கணக்கில் **Bermuda**–வின் **Taylor Carrick-**வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜோஷ்னா சின்னப்பா 11-3, 11-4, 11-5 என்ற செட்கணக்கில் கனடாவின் **Vahvaz Bulsara-**வை வென்றார்.

**>>>>>><<<<<**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியா 11 தங்கம், 3 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் மட்டும் **Komal, Khushi Ahlawat, Tamanna** உட்பட 10 பேர் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் பிரிவில் **Sanskar Vinod** தங்கப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<**

இந்தியா – தாய்லாந்து இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி, ஜூன் மாதம் 4ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை - பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

>>>>>**END**<<<<<